ஆண்டு சந்தா ரூ. 7. தனிப் பிரதி அணா 2. சிலோன் 15 சதம் REGD. NO 4643.

திராவிடநாடு

மலர் 11. | 5—10—52 | இதழ் 14

நடேசன் நூல் ... சென்னை

கடவுள் விஷயத்தில்.........

ஆச்சாரியாரும் ஆனந்த விகடனும்!

"ஆயுத பூஜையின் மகிமை குறித்து, சென்னை பஸ் தொழிலாளர் மத்தியில் பேசிய, ஆச்சாரியார், "கடவுளைத்தான் பூஜை செய்ய வேண்டும். ஆயுதங்களை எதற்காகப் பூஜிப்பது என்று கேட்கலாம். கடவுள் யந்திரத்திலும் இருக்கிறார். ஆயுதங்களிலும் இருக்கிறார். அவரே பரம்பொருள். சக்கரமும், வண்டியும், மோட்டார்காரும் தெய்வ சக்தியின் படைப்பே யாகும். அவற்றை நாம் பூஜை செய்யும்போது கடவுளையே பூஜை செய்கிறோம்" என்பதாகக் குறிப்பிட்டாராம்.

பார்க்குமிட மெங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் பரமானந்த ஜோதியைபூஜிக்க,வெற்றிலைபாக்கும் தேங்காயும், பணமும ஏன சுவாமி? 'பஜகோவிந்தம்' — பாஷ்யம் தேவையா? கோயில்களும் கொட்டு மேளமும், வேட்டு ஓசையும் பரம்பொருளுக்கேன்? 'உலகெலாம் உணர்ந்து ஓதற்கரியவனுக்கு,' விசித்திரமான பெயர்கள் ஏன்? விதவிதமான உருவங்கள் கோடிக் கணக்கில் ஏன்? ஒருவனே தேவன்—எனும் உத்தமக் கொள்கையைப் பாப்ப நீர் பாடுபடுவீரா?—என்பது போன்ற கேள்விகளை, கூடியிருந்த தொழிலாளர் எவரும், ஆச்சாரியார் அவர்களைக் கேட்கவில்லை.

ஆனால், 'பஜகோவிந்தம் பாடுவது ஏன், இவர்?' என்று மட்டும், நிச்சயம் அவர்கள் நினைத்திருப்பார்கள்—உள்ளுக்குள் சிரித்துமிருப்பார்கள். வெளியில் தெரிந்தால் வேலை போய் விடுமே! அவரோ, முதலமைச்சர்—அவர்களோ, தொழிலாளர்கள்!!

அதிலும் முதலமைச்சரை வரவேற்றுப் பேசிய 'ஆக்டிங்' போக்குவரத்து அதிகாரி சையத் அகமத், 'கடவுளுக்கு அடுத்த ஸ்தானத்தில் ராஜாஜியை எல்லோரும் கருதுவதாக'க் குறிப்பிட்டுப் புகழ்ந்திருக்கிறார்.

ஆக்டிங் அதிகாரிக்கு முன் அவர்கள் ஏதாவது புகன்றால்? 'ஆக்டிங்' 'நிரந்தரமாக', ஏதாவது அஸ்திரங்களைப் பூட்டி, ஆச்சாரியாரின் ஆபத்சகாயராக மாறலாமே! அதனாலோ, என்னவோ, தொழிலாளத் தோழர்கள் எவரும், கடவுளுக்குப் புது 'வியாக்யானம்' தந்த, ஆச்சாரியாரை நோக்கி எதுவும் கேட்கவில்லை.

ஆனால், பகுத்தறிவு உலகம், அன்பர் ஆச்சாரியாரின் இப்புது உரை கேட்டு, சிந்திக்காமலிருக்காது.

மேதின விழாவைக் குறிப்பிட்டு, அது உழைப்பின் உயர்வைக் குறிக்கும் விழா. அது போன்றதுதான் ஆயுத பூஜையும். "நமது முன்னோர்களும் அதே நோக்கம்தான் கொண்டிருந்தனர். பூஜைகளை ஏற்படுத்தினர்" என்றும் தெரிவித்துள்ளார்.

உழைப்பின் உயர்வை உணர்த்தவும் வணங்கவும், ஆயுத பூஜை முறை அமைந்தது என்று, அன்பர் ஆச்சாரியார் தெரிவிக்கிறார்.

'உழைப்பின் உயர்வு', சூடம் சாம்பிராணிகளாலும், தட்சணையாலும், ஒருநாளைக் கழித்து விடுவதால் ஏற்பட்டு விடுமா என்கிற கேள்விக்குப் பதிலை, தொழிலாளர்களே அறிவர். ஆனால், அவர் கூறிய வாசகத்திலுள்ள கருத்து இருக்கிறதே, அதை மட்டும் சிந்திக்கவேண்டுகிறோம்.

ஆச்சாரியார் பஜகோவிந்தப் பாராயணம் செய்பவர்! வைகுந்தவாசனின் 'நாமத்தை', நாவு, எப்போதும் உச்சரிக்கவேண்டுமென்பதற்காகத் தமது குழந்தைகளுக்கெல்லாம் லட்சுமி, நாமகிரி, நரசிம்மன் எனும் பெயர்களைச் சூட்டினவர். இன்றும் பாகவதம், பாரதம், படிக்கத் தவறுவதில்லை!

அவர் கூறுகிறார், உழைப்பின் உயர்வைக் காட்டவே பூஜை முறை ஏற்பட்டதாக.

ஆச்சாரியார் கூறுகிறார்—எங்கும் "அவன்" இருப்பதாக!

அவர் இந்துமதக் காவலர். இந்து மதத்தில் உள்ள அத்தனை கடவுள்களையும், ஆராதிக்கும் மனோபாவம் ஏற்படவேண்டுமெனக் கருதுபவர். அவர் கூறுகிறார், எல்லாவற்றிலும் 'பரம்பொருள்' இருப்பதாக!

அவர் நாஸ்திகரல்ல; ஆனால் இதே கருத்தை வலியுறுத்திக் கூறும் பிறரோ, நாஸ்திகர்கள்.

"நடமாடும் உருவமெலாம் கடவுட் கோயில்"

"கல் ஏன்? மந்திரம் ஏன்?"

"எங்கும் நிறை ஜோதிக்கு; ஏன், கோயிலும், கும்பாபிஷேகமும்?"

இப்படிக் கேட்பது நாஸ்திகம்! ஆனால், ஆச்சாரியார், இதே எண்ணங்களைச் சொல்வது அபார வேதாந்தத் திறமை!!

*

கடவுள் வியாக்யனத்துக்கு வரும், பக்தர் எவரும், அறிவின் கேள்விகளுக்குப்பதில்கூற முடியாத சமயத்தில், ஆச்சாரியார் கூறியது போன்ற, தத்துவார்த்தத்தில்தான் இறங்குவர். அரியும் சிவனும் ஒன்றென்பர்! 'குளத்துக்குப் பல படிக்கட்டுகளில்லையோ—அதைப் போலத்தான் மதங்களும். எந்தப் படிக்கட்டு மூலம் போனாலும், தண்ணீரைப் பெறலாம்; அதைப்போல எந்தக் கடவுளைத் தொழுதாலும் மோட்சத்துக்குப் போகலாம் என்பர். கேள்விகள் வெடிக்க வெடிக்க, ஒவ்வொரு படியாக இறங்கி வந்து, கடைசியில் "என்னமோப்பா! நீ சொல்வது உண்மைதான். ஏதோ ஒரு சக்தி இருக்குது. அந்தச்சக்தியைஒப்புக்கொள்கிறாயல்லவோ?" என்று, குரல் கம்மி, விடையிறுப்பர். சாம்பிராணி பூஜை! வேத பாராயணம்! பஜகோவிந்தம்! சிவார்ச்சனை!—எதில் எதைக் கடைப் பிடிப்போரானாலும், அறிவுலகம் கேள்விகள் பூட்டினால், கடைசியில் மேற்படி நிலைக்கே வருவர். "சிவனுக்கோ கங்கையும் பார்வதியும்! விஷ்ணுவுக்கு இரு மனைவிகள்!"—இதுபோல, புராணங்களில இருக்கும் கதைகளைச் சொல்லி, அறிவுலகம் வாதிட்டால், "எல்லாம் ஒன்றுதான். சக்தியும் சிவமும் ஒன்றே! கடவுள் ஒன்றே! அவரே எங்கும் நிறைந்தவர். தூணிலுமிருக்கிறார்: துரும்பிலுமிருக்கிறார்." என்று, பரம்பொருள், பற்றிப் பேச ஆரம்பிப்பர்.

இந்நிலை, பாகவத காலட்சேபகர்களுக்கு ஏற்படுவது, சாதாரணமானதல்ல; அதோடு நிலைத்து நீடிப்பதுமல்ல.

"ஏதோஒருசக்தி. அதையாவது ஒப்புகிறாயல்லவோ?" என்று, அறிவுலகைப் பார்த்துக்கேட்டு, அதன் மூலமாவது, திருப்தியடையப்பார்ப்பார்கள்.

பஜகோவிந்தப் பிரசங்கியான அன்பர் ஆச்சாரியாரும், இந்தக் கட்டத்தை எட்டிப்பார்த்திருக்கிறார். மேற்படி விழாவில் பேசும் போது, "நமது முன்னோர்கள் ஆதி சக்தியை பூஜித்தனர். இன்று மின்சாரரூபத்திலும் இன்னும் பலரூபங்களிலும் நாம் காண்பதெல்லாம் ஆதி சக்தியின் பிரதிபிம்பம்" என்றும் கூறியுள்ளார். இந்த ஆதிசக்தியைப் பற்றிய விவகாரத்தை ஒதுக்கி விடுவோம்.

அப்பேற்பட்ட ஆதிசக்திக்காக அறநிலையங்கள் ஏன்? ஆட்டு ரத்தம் எதற்காக? படையலும் பூஜையும் ஏன்? துதிக்க வேண்டுமென ஆச்சாரியார் வலியுறுத்துவது ஏன்?

இவ்விதக் கேள்விகளை, அறிவுலகம், பூட்டினால் உடனே, "நாஸ்திகன் இவன்!" என்ற, பட்டம் கிடைத்து விடுகிறது. ஆச்சாரியார், திருவரங்கத்துப்பெம்மானையும், மதுரை மீனாட்சியையும், திருவண்ணாமலைபாதாளலிங்கத்தையும், மற்ற இந்து மதக் கடவுள்களையும், துதிப்பவர்—மக்கள் எல்லோரும் துதிக்க வேண்டுமென அனுதினமும், போகுமிடமெல்லாம், வலியுறுத்திக் கொண்டிருப்பவர். அவர் கூறுவது "ஆதிசக்தி!"

அதற்கேன், கோயில்களும் கூட கோபுரங்களும், சமஸ்கிருதப் பாராயணமும், என்று கேட்கும் அறிவுலகத்துக்குக் கிடைக்கும் பட்டம் "நாஸ்திகர்" ஆனால் அவரோ, சகல கலா பண்டிதர்! சாஸ்திர விற்பன்னர்!!

*

இவ்விதம் தத்துவார்த்தம் பேசுவோர், விவாதத்தின் போதும், மற்றோரைமடக்கவும்,"பரம்பொருள்" "ஆதிசக்தி" ஆகியவைகளைக் குறித்து, விளக்குவரே தவிர, அவர் தம் அன்றாட வாழ்க்கையைக் கவனித்தால், தினந்தினம் தத்தமது இஷ்ட தெய்வங்களுக்கும் பூஜை நைவேத்யம் செய்யாமலிரார்.

அந்த அளவுக்கு அவர் தம் மனதில் கடவுள் மனப்பான்மைவேரூன்றிக்கிடக்கிறது. அன்பர் ஆச்சாரியாரும் அந்த 'ரகம்'தான்.

"ஆதிசக்தி"யை வணங்கும் முறை ஏற்பட்டது குறித்து, அறிவுலகத்தார், பலப் பல விளக்கங்களைச் சொல்லி வருகிறார்கள்.

"கடவுள் வணக்கம்" உண்டானது எவ்விதம்?"

இதற்கு ஏராளமான நூல்கள், இருக்கின்றன அறிவுலகில்.

இந்த நூல்களின் கருத்தை, ஆச்சாரியார் போன்றோரும் மறப்பதில்லை. சரிதாசிரியர்கள், பலரது, ஆராய்ச்சிகளையும் படித்தவர்கள். ஆனால் இதுபற்றி, அறிவுலகத்தார் கூறும் போதுதான், 'அக்கினி'யை வீசுகிறார்கள்!

> மனிதன் தனக்கு விளங்காததைக்கண்டு மருண்டான்.
> சூரியன், நெருப்பு, மழை—அவனுக்கு விளங்காத புதிர்.
> விளங்காததை வணங்கினான்.
> பயம் ஊட்டியதைக் கும்பிட்டான்.

ஆதிகால மனிதன், "கடவுளைச் சிருஷ்டித்தது" குறித்து,இவ்விதம் அறிவுலகத்தார் கூறுகிறார்கள்.

சில வேளைகளில் இதே கருத்தை 'ஐயனையும் மெய்யனையும்' அனுதினம் பூஜிப்போரும்கூறுவதுண்டு.

அந்தவகையில் கடந்த 28-8-52 "ஆனந்தவிகடன்" இதழின் "சரஸ்வதி தத்துவம்" என்ற தலைப்பில் த. நா. குமாரஸ்வாமி எனும் நண்பர் தீட்டிய கட்டுரையொன்று பிரசுரமாகியிருக்கிறது.

ஆனந்தவிகடன், கொள்கை யாவரும் அறிந்ததே! சரஸ்வதி பூஜையன்று, மேனாட்டான் செய்து அனுப்பிய, அச்சியந்திரங்களுக்கெல்லாம் நைவேத்யம் ஆகியிருக்கும். அந்த இடத்து இதழ், "கடவுள் பிறப்பு" குறித்து, எழுதுகிறது:—

"பழையகாலத்தில் ஆரியர்கள்பலவித இயற்கைச் சக்திகளை தேவதைகளாக உருவகம் செய்து உபாசித்தனர். ருக்வேதத்தில் சரஸ்வதி என்ற சொல் எத்தனையோ இடத்தில் வருவதைக்காணலாம்.......... 'ஸரஸ்' என்பதற்கு, 'நீர்,' 'ஒளி' என இரண்டு பொருள்களைத் தருகிறது. சூரியனுக்கு 'ஸரஸ்வான்' என்ற பெயர் இல்லையா! ஸரஸ்வதி யென்றால் ஒளிபடைத்தவள். ஆரியர்கள் ஆற்றங்கரையோரமாக வாழ்ந்த மருதத்திணை மக்கள். ஆப்கானிஸ்தானத்துக்குக் கிழக்கே அரகோஷியாவில் 'ஹரக்வைதி' என்ற நதியின் பெயரை ஜெந்தவஸ்தா குறிப்பிடுகிறது. அதுவே ஆரியர்களின் மூலஸரஸ்வதி. அப்பால், ஆரியர் இந்தியாவில் ஜீவநதி ஓடும் பிரதேசத்தில் குடியேறினர்.

(5-ம் பக்கம் பார்க்க)

திராவிடநாடு

காஞ்சி] 5—10—52 [ஞாயிறு

கிருஷ்ணன் தூது

★

கன்னக்கோலுக்கு, செங்கோல் அடிபணிந்தது! கள்ளரிடம், காவலன் கெஞ்சினன்!!

காணமுடியாத காட்சி இது!—ஆனல் கடந்த வாரம், பம்பாய் நகரத்தில் நடைபெற்றிருக்கிறது.

டில்லி அமைச்சர், பம்பாய் ஆலையரசர்களிடம் பல்லிளித்திருக்கிறார். 'அனுதாபம் காட்டுக!' என்று தண்டனிட்டிருக்கிறார்.

வர்த்தக மந்திரி கிருஷ்ணமாச்சாரி, டில்லியிலிருந்து பம்பாய்க்குச் சென்று, இந்தக் கோரிக்கையைத் தெரிவித்திருக்கிறார்.

முகத்தை மறைத்துக்கொள்ளாதீர்கள்! முற்றிலும் உண்மை!!

கைத்தறி நெசவாளரிடம் அனுதாபம் காட்டுமாறு, ஆலையரசர்களைப்போய் வேண்டியிருக்கிறார். வேண்டியவர், மந்திரி! வேண்டுதலைக் கேட்டோர் ஆலையரசர்கள்!!

திகைப்பீர்கள் — உண்மைதான் தோழர்களே—நடந்திருக்கிறது.

'பாரத் வர்ஷம்'—பரந்த ராஜ்யம் என்றெல்லாம் போற்றுகிறார்களே, அதையாளும் அமைச்சர், சிலரை நோக்கிச் சென்று, தெரிவித்திருக்கிறார் இதனை.

"சிலர்" — டில்லியமைச்சரைத் தம்மிடம் ஓடிவரும்படி செய்திருக்கிருக்கிறார்கள்!

"பார்த்தாயா? சிறு அறிக்கை விடுத்தோம். டில்லி பம்பாய்க்கு ஓடிவந்தது. பார் எம்செல்வாக்கை!" என்று, பம்பாய் சேட், உலகத்தைக் கேலியோடு பார்க்கிறான்.

அவனுக்காக, ஓடிப்பேசும் டில்லியை, நகைப்போடு பார்க்கிறது, அறிவுலகம். ஆச்சரியப்படுகிறது! ஆயாசத்தோடு கண்ணீர் சிந்துகிறான், சுதந்திரந்தியாகி!!

சிறு அறிக்கை, அதற்காக, டில்லி அமைச்சர், பம்பாய்க்கு ஓடவேண்டியதாகிவிட்டது. பரிதாபத்தோடு பார்க்கிறது, இதனை, பாசங்கொண்டோர் உள்ளம்! முதலாளித்துவம் கைகொட்டி, மிடுக்கோடு பார்க்கிறது!!

"அவர்கள் சிலர்" — ஆட்டிப் படைக்கிறார்களே இந்திய உபகண்டத்தை என்று, எள்ளி நகையாடுகிறது, எழுச்சி முரசு கொட்டும் நாடுகள்.

வெள்ளைக்காரன் சிரிக்கிறான், காந்தியார், வ. உ. சி. போன்ற தியாகிகளின் படங்களைப் பார்த்து! "வெள்ளை முதலாளித்துவமென்று ஏசினையே — ஏழையே! இப்போது என்ன நடக்கிறது பார்." என்று கேலியோடு பார்க்கிறான் நம்மை!!

வேதனையான காரியம்! அச்சம் துக்கமின்றி செய்திருக்கிறார், கிருஷ்ணமாச்சாரி!!

பூகம்பமும் புயலும் ஏற்பட்டதால் அல்ல, பம்பாய்க்குச்சென்றது. ஆலைத் தொழிலாளர்களின் நல்வாழ்வுக்காக வாதாட அல்ல, கிருஷ்ணமாச்சாரி, சென்றது! சிறு அறிக்கை ஒரு மகஜர். டில்லியிலிருந்து பறந்திருக்கிறார், வியாபார மந்திரி! அனுதாபம் காட்டுக' என்று கேட்பதற்காக!!

கைத்தறி நெசவாளருக்கு, ஆலையரசர்கள் அனுதாபம் காட்டவேண்டுமாம். வாடுவோரின் வாழ்வைச் செப்பனிடும் பொறுப்பும், அதிகாரமும் பெற்றவர், அதற்காக 'யாரிடமோ' ஓடுகிறார்! ஆட்டுக்கு உயிர்ப்பிச்சை அளிக்க புலியிடம் அனுதாபம கேட்கிறார்! 'சிம்மம்' என நம்பினேம்— சிம்மாதனத்தில் அமர்த்தினேம்—அது சிறு நரியாகிறது! ஆடும் புலியும்மோதிக்கொள்ளும்போது ஆட்டின் மண்டையிலிருந்து சிந்தும் ரத்தத்தை ருசிப்பார்க்கத் துடிப்பதுபோல் நடக்கிறது காரியங்கள்!

விந்தை! வெட்கக்கேடு! சகிக்க முடியாத காரியம்! விழியில் புனல் புரள, வீதிகளில் பிணங்களாய் வீழ்ந்துகொண்டிருக்கும் தறிக்காரர்களின் நல்வாழ்வுக்கு, பணமிம்பங்களிடம்போய் நிற்கிறார். அவர் அமைச்சர்! அதிலும் பரந்த சாம்ராஜ்யத்தின் அமைச்சர்!!

இரண்டு கோடி நெசவாளர்கள், இந்திய உபகண்ட முழுமையும், வாழ்வை நகர்த்த, அல்லாடுகிறார்கள். சிங்கார பூமி சென்னை தேம்பி அழுகிறது! அதன் மடியிலே, தவமுப் பிறந்த மனிதர்கள், வாழ முடியாது தினசரி பிணங்களாகிக்கொண்டிருக்கிறார்கள்.

அவர்களை ஆளும் சர்க்கார், மடிப்பிச்சைக் கேட்கிறது, ஒரு சிலரிடம்! 'அனுதாபம்' காட்டச் சொல்கிறது!!

வேஷ்டி, புடவை ஆகிய ரகங்களை நெசவாளருக்கு ஒதுக்கிவிடுமாறு நீண்ட நாளாக, கிளர்ச்சியிருந்து வருவதை அறிவோம். அந்த நல்ல கோரிக்கைக்கு, செவி சாய்த்தார், சென்னை முதலமைச்சர்! தெரிவித்தார் டில்லிக்கு!!

"முப்பது லட்சம் மக்களுக்கு வாழ்வளிக்கும் யோசனை" என்று, ஆச்சாரியார் ஆதரவு தந்ததும், தேசீய இதழ்கள் எழுதின. ஆனல், அதைத் 'தெந்தினு' பாடுவதாகக் கூறினர், கிருஷ்ணமாச்சாரி! 'கோமாளிகள்' என்றார், கோரிக்கை விடுத்தோரைப் பார்த்து!!

குமுறினர், நெசவாளர் தலைவர்கள்—"பாரய்யா!" என்று புள்ளி விபரங்களோடு, விளக்கினர்.

"கைத்தறிக்கு மேற்படி ரகங்களை ஒதுக்கினல், இந்தியர்கள் நிர்வாண இயக்கத்தை மேற்கொள்ளவேண்டியதுதான்" என்றார், நிர்வாணத்தை ரசித்த ஆலமரத்தடி கிருஷ்ணபரமாத்மா', பாணியில்.

சீறினர், நெசவாளர் தலைவர்கள்: "நமது நாட்டில் மொத்தம் 28 லட்சம் கைத்தறிகள் உள்ளன. அவை யாவும் சேர்ந்து 500 கோடி கெஜத்துக்கு அதிகமாகத் துணி உற்பத்தி செய்யமுடியும். ஆனல், சர்க்கார் ஒழுங்காக மாதந்தோறும் 1¼ லட்சம பேல் நூல் சப்ளை செய்யவேண்டும்", என்று புள்ளி விபரத்தோடு விளக்கினர்.

"எனக்கும் அவருக்கும் நடக்கும் விவாதத்தில் எங்கள் சொந்த விஷயத்தைப் பற்றியாரும் கவலைப்படவேண்டாம். நாங்களே தீர்த்துக் கொள்வோம்" என்று, ததமது போட்டிப் பிரச்னைகளைப் புகவிட்டார், அன்பர் ஆச்சாரியார். சொந்த விஷயம் கூட அரசாங்க அலுவலில் அட்டகாசம் செய்யும்!— என்ற உண்மை அறிந்து, திகைத்தோம் நாம்.

"பொறுப்புள்ள மந்திரிகள் கஷ்டப்படும் ஏழைகளிடம் அனுதாபம் இல்லாமல் இவ்விதம் பேசுவதினல் ஏற்படும் விபரீத விளைவுகளைப் பற்றித்தான் கவலைப்படுகிறேம்" — என்று "கல்கி" இதழ், மந்திரியார் களிடமிருந்து, அனுதாபம் கேட்டது.

மந்திரியார், பம்பாய் ஆலையரசர்களிடம் சென்று, "அனுதாபம்" கேட்கிறார். கேட்கிறாரா?—அல்ல! அல்ல!!—"வேண்டுகோள்" என்று பிரசுரித்திருக்கிறது, தேசீய இதழ், தினமணி.

வேஷ்டி, புடவை இந்த இரண்டு ரகங்களும் மில்களுக்குக் கூடாது. மில்கள் போட்டியினலேயே, தறி நசிக்கிறது! மற்றரகங்களை ஆலைகள் தயாரித்துக் கொள்ளட்டும் — என்பது, நெசவாளர் கோரிக்கை.

கோரிக்கை, சர்க்காரைப்பார்த்து செய்யப்பட்டது! சர்க்கார், டில்லியைப் பார்த்தது! டில்லி—பம்பாய் ஆலையரசர்களிடம் வேண்டுகோள் செய்கிறது!!!

நெசவாளர் கோரிக்கை கேட்ட ஆலையரசர்கள், தமது லாபக் கொள்ளையை இழக்கத்துணியாததால், "புது யோசனை" வெளியிட்டனர். 'அதிக விலையுள்ள உயர்ந்த ரகங்களை' மட்டும் தறிகாரருக்கு தரலாம் என்பதும், வேட்டி புடவை உற்பத்தி தமக்கு இல்லாமல் தடுக்கக் கூடாது என்பதுமே, ஆலையரசர்கள் விடுத்த அறிக்கையும் மகஜரும்.

அதைக் கண்டதும் டில்லியிலிருந்து, 'கிருஷ்ணன்', தூது போயிருக்கிறார்.

தமது அதிகாரத்தின் மூலம், ஒரே உத்தரவு மூலம் ஏழை நெசவாளர்களின் கோரிக்கையை டில்லி செய்துவிட முடியும். மறுக்கும் ஆலைகளை, மூடமுடியும்! தாமே எடுத்தும் நடத்தலாம்!!

அவ்வளவு அதிகாரத்தை, மக்கள் தந்துள்ளார்கள். அதனலேயே, "ஆசியாவின் ஜோதி" என்று வெளி நாடுகள் புகழ்கின்றன. ஆனல், ஜோதி, மின்மினியிடம் தண்டனிடுகிறது! மடிப்பிச்சை கேட்கிறது!!

பலகோடி மக்கள் பிரச்னை—
ஒரு சிலருக்காக, தாமதம்
செய்யப்படுகிறது.

ஆலையரசர்களிடம் 'அனுதாபம்' கோரிய கிருஷ்ணமாச்சாரி, பத்திரிகை நிருபர்களிடம் பேசுகையில் தெரிவித்தாராம், "பம்பாய் மில் சொந்தக்காரர்கள் சங்கம் சர்க்காருக்கு சமர்ப்பித்துள்ள மகஜரை 'அனுதாபமற்றது' என்று கருதமுடியாது" என்பதாக.

சென்னை—டில்லியிடம் அனுதாபம் கேட்கிறது.

டில்லி, பம்பாயிடம் அனுதாபம் கேட்கிறது.

அதேநேரத்தில் ஆலையரசர்களிடம் அனுதாபம் காட்டப்படவேண்டும் என்றும் கருதுகிறது.

விசித்திரமான நிலை! வேடிக்கையான காட்சி!!

விடுதலைப் போராட்டத்திலே உயிர் சிந்திய தியாக மணிகள், எழுந்துவந்தால், அவர்கள்காறித்துப்புவர்—இந்த நிலைகண்டு. அந்த எச்சில் கடல், இவர்களை, மூழ்கடித்துவிடும்!! பொதுமக்கள் சர்க்காராம் இதற்குப்பெயர்—சே! வெட்கம்! வெட்கம்!!

★

6-ம் பக்கத் தொடர்ச்சி

சந்தித்தவர்கள், இந்தியத் தூதுவரும் — அமெரிக்க ஜனதிபதியும்.

அமெரிக்க ஜனதிபதிக்கு, கம்யூனிசத்தை ஒழிப்பதில் அக்கரையும் ஆவலும் உண்டென்பதை உலகு அறியும். 'ரஷ்யாவைத் தமது பரம விரோதி' என்று பகிரங்கமாக, அமெரிக்க முதலாளிகள் பிரகடனமும் செய்துவருகின்றனர்.

அவருக்கு ஆனந்தம் ஏற்பட்டதில் அர்த்தமுண்டு.

ஆனல், "ரஷ்யா எமதுதோழன்" "எமது காந்தீயத் தத்துவமும் மார்க்கீசமும் ஒன்றுதான்" என்று பறைசாற்றும் இந்தியத் தலைவர்களுக்கு, ஓடோடியும் சென்று, தாம் பெற்ற விருதைத் தெரிவிக்க வேண்டிய, ஆசைஉண்டானதேன்? "உங்களைப்போலத்தான் நாங்களும்" என்று உரைக்கத் தூண்டியதேன்?

*

"வடநாட்டு ஆலையரசர்கள் அமெரிக்க முதலாளிகளுடன் சேர்ந்து கொண்டு, கொட்டமடிக்கிறார்கள்"

"டில்லி ஆட்சி, வடநாட்டு முதலாளிகளின் கைப்பாவை ஆகிவிட்டது"

"தமது கைப்பொம்மையை, ட்ரூமன்வசம் ஒப்படைப்பதில், வடநாட்டு முதலாளிகள், ஜரூராயிருக்கிறார்கள்"

"கம்யூனிசத்தை எதிர்க்க, இந்தியாவைத் தளமாக்க, ட்ரூமன் தயாராகிக்கொண்டு வருகிறார். அதன் விளைவுதான், அமெரிக்கா அனுப்பும் உதவிகள்"

இவ்விதம் இன்றைய ஆட்சியாளர் நிலைகுறித்து, நாம் விளக்கினல், சீறும் தோழர்கள் இருவர் சந்திப்பின்போதும் நடைபெற்ற உரையாடல்களைக் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

வடநாடு, தேர்தலில் பெற்ற வெற்றியைக் காட்டி, குதூகலிக்கிறது அமெரிக்காவிடம்! தேர்தலில் காங்கிரஸ் வெற்றிபெற, வடநாட்டு ஆலையரசர்களே முக்கிய காரணமாகும். வடநாட்டில் காங்கிரஸ் முரசு கொட்டியிருப்பதும் உண்மை!

அதைக் காட்டி குதூகலம் அடைகிறது, டில்லி ஆதிபத்தியம்.

மனிதன் மனிதனுகவாழவேண்டுமெனும்,' நல்ல கொள்கையைக் கேலி செய்யும், ட்ரூமனுடன், கைலாகு கொடுக்கிறது, டில்லி.

தமது ஆடம்பரத்தைப் பற்றி விளம்பரம் செய்ய, இந்திய நட்சத்திரங்களை அழைக்கும் அமெரிக்காவுக்கு, இந்தியாவும் உடந்தையாயிருக்கிறது.

கலைஞன் கண்ணீர் வடிக்கிறான்! கடல்கடந்து கலைஞர்களை அழைத்துப் பாராட்டுவதுபோல 'விளம்பர தந்திர முறை'யைக் கடைப்பிடிக்கிறது அமெரிக்கா!!

திட்டமிட்டு பொதுவுடைமையை எதிர்த்து டில்லியும் வாஷிங்டனும், சதிசெய்கிறது.

இந்தச் சதியில் முன்னணியிலிருப்போர், ஆலைபெருத்த வடநாட்டுப் பண மூட்டைகள்.

அவர்கள்தரும் ஆதரவைக்காட்டி பாசீசம், முதலாளித்துவத்தோடு கொஞ்சுகிறது! இயற்கையான பாசத்தை வலிவுபடுத்திக் கொள்கிறது!!

தெற்கிலிருக்கும் நாமோ, பணபீடங்களின் பிரதிநிதியான காங்கிரசைத் தோல்வியுறச் செய்தோம். காட்டைக் கழனியாக்கினேம். ஆனலும் வதைபடுகிறேம்! வாடுகிறேம்!!வாட்டிடும் முதலாளித்துவப் பிடியிலிருந்து விலகி, தனியாக வாழ முடியவில்லை.

தான் பெற்ற வெற்றியைக் காட்டி வடக்கு, அமெரிக்க வெறியர்களுடன் குலாவுகிறது! குதூகலிக்கிறது!

ஏழையர் நாம், காங்கிரஸ் பிற்போக்கின், இடுப்பொடித்தோம். ஆனலும், அவதியுறுகிறேம். நமது ஆனந்தத்தைக் கொண்டாட, 'நமது நண்பர்களே' தயங்குகிறார்கள்—'பிரிவினையா?' என்று வாதிட வருகிறார்கள்.

அவர்களது உள்ளத்தை, ட்ரூமன் சந்திப்பு, திறந்துவிடட்டும்.

★

திராவிட முன்னேற்றக் கழகக் கிளைகளின்

★ புது நிர்வாகிகள் ★

கோவை மாவட்டம்

தூஞர்

செய: எஸ். என். அற்புதசாமி, துணை: ஆர். எஸ். மணியம், பொரு: எஸ். ஆர். சுப்ரமணியம், மாவட்டப்: எஸ். என். அற்புதசாமி.

செயற்குழு 10 பேர்.

கொல்லங்கோடு

செய: கே. ஆர். லட்சுமணன், துணை: எ. ஆர். சந்திரன், பொரு: எம். கே. சிவராமன், மாவட்டப்: எ. ஆர். சந்திரன்.

செயற்குழு 8 பேர்.

குன்னத்தூர்

செய: கே. கே. சுந்தரம், துணை: கே. எம். எஸ். அப்பன், பொரு: கே. என். முத்துசாமி, மாவட்டப்: கே. என். நடராசன்.

செயற்குழு 18 பேர்.

வாளரவாடி

செய: ஆர். தாமோதரம், துணை: என். வி. கந்தசாமி, பொரு: மலையாண்டிசாமி, மாவட்டப்: இரா. அவையழகன்.

செயற்குழு 13 பேர்.

ஒண்டிப்புதூர்

செய: பி. அய்யாசாமி, துணை: ச. சின்னபழனிச்சாமி, பொருள்: மா. பொன்னுசாமி, மாவட்டப் பி. அய்யாசாமி.

செயற்குழு 13 பேர்.

பாலக்காடு

செய: எஸ். வி. மாரிமுத்து, துணை: சி. சங்கரன், பொரு: ஜி. சங்கரநாராயணன், மாவட்டப்: இரா. நடராசன், எஸ். தங்கவேலர்.

செயற்குழு 11 பேர்.

வெள்ளலூர்

செய: சி. கோபால், துணை: கே. மருதாசலம், பொரு: ஆர். கிருஷ்ண சாமி, மாவட்டப்: எம். ரங்கசாமி.

செயற்குழு 6 பேர்.

பெத்தாம்பாளையம்

செய: கே. ராமசாமி, துணை: எஸ். பெரியசாமி, நாராயணசாமி, பொரு: பி. சாமிநாதன், மாவட்டப்: பி. பழனிசாமி, எஸ். கோவிந்தன்.

செயற்குழு: 6 பேர்.

காங்கேயம்

செய: கே. வி. முத்தியாலு, துணை: கே. பி. முத்துச்சாமி, பொரு: கே. என். தணிகாசலம்; மாவட்டப்: கே. வி. முத்தியாலு, எ. எஸ். நாதன்.

செயற்குழு 9 பேர்.

வெள்ளைக் கோயில்

செய: பி. லோகநாதன், துணை: ஆர். அய்யாசாமி, பொரு: சென்னியப்பன், மாவட்டப் ஆர். அய்யாசாமி.

செயற்குழு 11 பேர்.

புலியகுளம்

செய: எஸ். பி. ஆரோக்யசாமி, துணை: அ. பழனிச்சாமி, பொரு: எம். கருப்பசாமி.

செயற்குழு 11 பேர்.

நாசவநாய்க்கன்பட்டி

செய: எஸ். எஸ். சாமிநாதன், துணை: என். ராமசாமி, பொரு: கே. இளங்கோ, மாவட்டப்: எஸ். எஸ். தங்கப்பழம்.

செயற்குழு 10 பேர்.

நாகமநாய்க்கன்பட்டி

செய: மு. பழனிசாமி, துணை: மு. குப்புசாமி, பொரு: ஜி. சிதம்பரம், மாவட்டப்: மு. பழனிசாமி.

செயற்குழு 14 பேர்.

வள்ளிபுரந்துப்பாளையம்

செய: கே. வி. பெரியசாமி, துணை: வி. வி. பெரியசாமி, பொரு: பி. சண்முகம், மாவட்டப்: வி. வி. அங்கமுத்து.

செயற்குழு 7 பேர்.

வெளி மாவட்டங்கள்

பெரியார் நகர் (பெங்களூர்)

செய: பெ. ம. அப்பாதுரை, துணை: எஸ். ஜே. உசேன், பொரு: சி. முனுசாமி, மாவட்டப்: எஸ். ஜே. உசேன், ஆர். ராகவன்.

செயற்குழு 10 பேர்.

அக்கிப்பேட்டை (பெங்களூர்)

செய: மா. மன்னர், துணை: எம். கிருஷ்ணன், பொரு: வி. கே. நடேசன், மாவட்டப்: டி. கே. சாமி.

செயற்குழு 8 பேர்.

ஆண்டர்சன்பேட்டை K. G. F.)

செய. சி. தம்பித்துரை, துணை: மு. இளஞ்சேரலாதன், பொரு: இரா. முல்லைவழுதி.

செயற்குழு 8 பேர்.

தாராவி (பம்பாய்)

செய: எல். என். செழியன், துணை: தி. மு. பொற்கோ, பொரு: மி. எஸ். செல்லையா செயற்குழு 25 பேர்.

மதுரை மாவட்டம்

திருமலாபுரம்

செய: எஸ். வி. கருப்பையா, துணை: எ. பொன்னுசாமி, பொரு: என். எஸ். கே. சுப்பையா, மாவட்டப்: எஸ். எஸ். சண்முகம்.

செயற்குழு: 9 பேர்.

சின்னமனூர்

செய: எம். கிருஷ்ணன், துணை: எஸ். ராசு, பொரு: எஸ். குருசாமி, மாவட்டப்: சோ. பாமு.

செயற்குழு: 12 பேர்.

கோட்டக்குடி

செய: க. பி. அழகிரிசாமி, துணை: வீ. ராமசாமி, பொரு: அ. ராமசாமி, மாவட்டப்: க. பி. அழகிரிசாமி.

செயற்குழு 9 பேர்.

சில்வார்பட்டி

செய: எ. எஸ். பெருமாள் துணை: துரைச்சாமி, பொரு: சீ. கந்தசாமி, மாவட்டப்: கு. சீனிவேல்.

செயற்குழு 20 பேர்.

பெரியகுளம்

செய: மு. ராதாகிருஷ்ணன், துணை: கோ. முனியாண்டி, பொரு: அப்துல் காதர், மாவட்டப்: ப. கு. ராமசாமி, கே. தங்கவேல்.

செயற்குழு 12 பேர்.

கீழ்மங்கலம்

செய: ஏ. கே. முத்தையா, துணை: எம். பெருமாள், பொரு: இரா. கரிகாலன், மாவட்டப்: ப. ராமலிங்கம்.

செயற்குழு 10 பேர்.

மேல்மங்கலம்

செய: கு. முனியாண்டி, துணை: எம். ஜி. சாமி, பொரு: எஸ். டி. காளியப்பன், மாவட்டப்: சே. ராசரத்தினம்.

வடுகப்பட்டி

செய: கா. காமாட்சி, துணை: மு. அருணகிரி, பொரு: ச. மதுரைவீர சாமி, மாவட்டப்: க. சுப்பையன்.

செயற்குழு 8 பேர்.

அப்பிப்பட்டி

செய: மா. வை. சுருளி, துணை: எஸ். பாண்டியன், பொரு: செல்லப்பா, மாவட்டப்: க. பாலையா.

செயற்குழு 10 பேர்.

பட்டிவீரன்பட்டி

செய: க. நடராசன், துணை: மீனாட்சிசுந்தரம், பொரு: மு. மல்லையா, மாவட்டப்: க. நடராசன்.

செயற்குழு 9 பேர்.

இராமநாதபுரம் மாவட்டம்

ராமச்சந்திரபுரம்

செய: ஆர். வி. பி. கரிகாலன், துணை: ந. ஆறுமுகப்பெருமாள், பொருள்: நா. ஏகாம்பரம். மாவட்டப்: கு. குருசாமி, பி. நாராயணன். செயற்குழு: 12-பேர்.

ராமநாய்க்கன்பட்டி

செய: மீ. மு. அருணசலம், துணை: கா. தனுஷ்கோடி, பொருள்: மு. காளியப்பன், மாவட்டப்: மு. காளியப்பன், சி. அருணசலம் செயற்குழு: 11-பேர்.

மல்லிபுதூர்

செய: கு. பெருமாள்சாமி, துணை இரா. பெருமாள்சாமி, பொருள்: என். கிருஷ்ணன், மாவட்டப்: த. பெருமாள்சாமி, தம்பையா. செயற்குழு: 15-பேர்.

முகவூர்

செய: மு. பாலகுரு, துணை: அ. காசியப்பன், பொருள்: பி. என். பி. கருஞ்சிவலிங்கம், மாவட்டப்: மீ. அழகப்பன். செயற்குழு: 12 பேர்.

பரமக்குடி

செய: எஸ். சாளாமணாளன், துணை: அ. மை. அப்துல்வகாப், பொருள்: டி. என். ஆர். லிங்கன் மாவட்டப்: சு. தண்டபாணி. செயற்குழு: 10-பேர்.

நம்புதாளை (தொண்டி)

செய: எல். செய்யதுஇப்ரகிம், துணை: கு. அழகன். பெருமாள்: பி. கா. யூசுப், மாவட்டப்: எம். இப்ரகிம். செயற்குழு: 12-பேர்.

சிங்கம்புணரி

செய: செ. குருசாமி, துணை: பெரி. அழகு, பொருள்: பி. எஸ். பார்வதம், மாவட்டப்: கு. அண்ணாமலை. செயற்குழு 11 பேர்.

திருக்கோட்டியூர்

செய: சி. முத்துசாமி, துணை: மு-ராவணன், பொருள்: இரா. காசிநாதன், மாவட்டப்: எஸ்-எஸ்-தென்னரசு. செயற்குழு 5 பேர்.

விருதுநகர்

செய: ந. ராமச்சந்திரபாண்டியன் துணை: பா. சி. பெரியசாமி, பொருள்: கே. எஸ். எஸ். அய்யாசாமி, மாவட்டப்: எஸ். உத்தண்டன், எ. வி. பி. ஆசைத்தம்பி. செயற்குழு: 11 பேர்.

மேலரண்டுறைநாடு

செய: எஸ். ஆர். ராஜா, துணை: டி. சின்னத்துரை, பொருள்: எம். செல்லக்கனி, மாவட்டப்: எஸ். எம். ராமசாமி, செயற்குழு: 8 பேர்.

விளாம்பட்டி

செய: எஸ். சாமி, துணை: அ. மா-கிருஷ்ணசாமி, பொருள்: இ.வ. மா. தங்காாசன், மாவட்ட: என். கே. குருசாமி, செயற்குழு: 11-பேர்.

செங்குன்றபுரம்

செய: க. குருசாமி, துணை: இரா. வெள்ளைச்சாமி, பொருள்: என். தவசியப்பன், மாவட்டப்: வீ. கு. நீராரு, செயற்குழு 7 பேர்.

தோழர்களே!

கழக நிர்வாகிகள் தேர்தல் செய்திகளை, தலைமைக் கழகத்துக்கு அனுப்பக் கோருகிறோம். தலைமைக் கழக அங்கீகாரம் பெற்ற செய்திகள் மட்டுமே, "திராவிடநாடு" இதழில் பிரசுரிக்கப்படுகின்றன. இது சம்பந்தமான கடிதப் போக்குவரத்துக்கள் பொறுப்பாளர் தி. மு. க. தலைமை நிலயம், 'அறிவகம்' ராயபுரம் சென்னை" என்ற முகவரிக்கு எழுதிக்கொள்ளவும்.

திருப்பத்தூர்

செய: கா. காத்தமுத்து, துணை: பி. ராமையா, பொருள்: மா. ராசாமணி, மாவட்டப்: கா. முகம்மதலி செயற்குழு விபரம் இல்லை.

சாத்தூர்

செய: எஸ். எஸ். பி. சண்முகநாதன், துணை: வி. கே. சாமி, பொருள்: சி. சொன்னையா, மாவட்டப்: ம. நடராசன். எஸ். தங்கராசன். செயற்குழு 16-பேர்.

சேலம் மாவட்டம்

நாட்டாமங்கலம்

செய: பி. சுந்தரம், துணை: வி. வேணுகோபால், பொருள்: நா. ஜெயராமன், மாவட்டப்: பொ. அண்ணாமலை, ந. சுந்தரம், செயற்குழு 11 பேர்.

திருச்செங்கோடு

செய: என். பி. சதாசிவம் துணை: ப. ராமசாமி, பொருள்: டி. பி. ஆறுமுகம், மாவட்டப்: என். பி. சதாசிவம். செயற்குழு 18 பேர்.

செவ்வாய்பேட்டை

செய: பி. பி. பத்மநாபன், துணை: எஸ். சாக்ரடீஸ், பொருள்: கே. எ. கந்தசாமி மாவட்டப்: கே. கே. மகாதேவன். செயற்குழு 18 பேர்.

வேலூர்

செய: வி. எ. லட்சுமணன், துணை ந. தங்கராசு, பொருள்: கு. ராசலிங்கம், மாவட்டப்: வி. எ. லட்சுமணன் செயற்குழு: 18-பேர்.

குளக்கரட்டுப்புத்தூர்

செய: கே. பி. ராசப்பன், துணை: எஸ். வி. காளியப்பன், பொருள்: என். ராமசாமி, மாவட்டப்: கே. பி. ராசப்பன், எம். கருப்பண்ணன். செயற்குழு 13 பேர்.

பேளுக்குறிச்சி

செய: ஜி. பி. சோமசுந்தரம், துணை: பி. எ. துரைசாமி, பொருள் கே. ரங்கசாமி, மாவட்டப்: ஜி. பி. சோமசுந்தரம், செயற்குழு: 15பேர்

அயோத்தியாபட்டணம்

செய: இரா. மாணிக்கம், துணை: சு. தனபால், பொருள்: எ. ராஜு மாவட்டப்: இரா. மாணிக்கம், என். பெருமாள். செயற்குழு: 17 பேர்.

பொட்டனேரி

செய: கே. எஸ். மாணிக்கம், துணை: எ. வேலாயுதம், பொருள்:

சி. என். ஏ.

சுற்றுப் பிரயாணம்

அக்

1. கடலூர்
2. திருச்சி
3. ஈரோடு
4. திருச்சி காலை
4. இரவு—பொன்னமராவதி
5. அம்மையப்பன்

திருவாரூர் சமீபம்

திருத்தம்

அதிராம்பட்டினம் (தஞ்சை) கழகத்தேர்தல் செய்தியில் மாவட்டப் பிரதிநிதி என். எஸ். இளங்கோ என்பதைச் சேர்த்துக் கொள்ள வேண்டுகிறோம்.

*

அவிநாசி (கோவை) கழகத்தேர்தல் செய்தியில் மாவட்டப்பிரதிநிதி டி. கே. சந்திரன் என்பது தவறு டி. கே. சர்தார் என்று இருக்கவேண்டும்.

வி. எ. ராமசாமி மாவட்டப்: கு. மு. ராசன். செயற்குழு: 10 பேர்.

பட்டணம்

செய: பி. சி. சுப்பு, துணை, இரா. ஆறுமுகம், பொருள்: பி. எஸ். முத்து. மாவட்டப்: கை. அத்தியப்பன். செயற்குழு 8-பேர்.

இடைப்பாடி

செய: இரா. தாண்டவன், துணை: வீ. இரா. தாண்டவன் பொருள்: பா. பண்டரிநாதன், மாவட்டப்: இரா. தாண்டவன். செயற்குழு 11 பேர்.

சட்டையம்புதூர்

செய: மு. தர்மலிங்கம், துணை: த. சுந்தரம், பொருள்: பெ. ஆ. நாட்டராயன், மாவட்டப்: இ. ப. அர்த்தனரி, கொ. வையாபுரி, செயற்குழு: 15-பேர்.

தஞ்சை மாவட்டம்

அம்மையப்பன்

செய: வே. சோமசுந்தரம், துணை: பி. ஜெயசந்திரன், பொருள்: கோ. தங்கவேலு, மாவட்டப்: வெ. ரங்கராசு செயற்குழு: 7 பேர்.

சக்கரப்பள்ளி

செய: கே. எம். பாட்சா, துணை: பி. எ. கனி, பொருள்: எஸ். எ. மாதர்சா, மாவட்டப்: பி. அப்துல் கனி, கே.எம். பாட்சா. செயற்குழு: 13 பேர்.

நல்லிவன்னியன்குடிக்காடு

செய: ம. வச்சிரபதி, துணை: சி. தங்கய்யன், பொருள்: வெ. இராமையா, மாவட்டப்: க. காசிஅய்யா. செயற்குழு: 17 பேர்.

திருவைகாவூர்

செய: த. சந்திரசேகரன், துணை: சொ. தெய்வசிகாமணி, பொருள்: ந. கிருஷ்ணமூர்த்தி, மாவட்டப்: தி. ராமையன். செயற்குழு:11 பேர்

திருநாகேஸ்வரம்

செய: வி. இரங்கராசு, துணை: நா. தண்டாயுதபாணி, பொருள்: எ. நாகராசன். மாவட்டப்: டி. வி. சீனிவாசன். செயற்குழு: 8 பேர்.

ஏனங்குடி

செய: வி. ரங்கராசு, துணை: இரா. முத்துவரதன், பொருள்: வி. கோவிந்தராசுலு, மாவட்டப் எஸ். எஸ். மணி. செயற்குழு: 13 பேர்.

அனுதாபம்

திருப்பத்தூர் கழகச் செயல் வீரரும், சுயமரியாதைச் சுடருமான தோழர் M. நடேசன் அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் 15—9—52ல் சாவுக்கு இரையானார் எனும் செய்திகேட்டுக்கலங்கினோம். அவருக்கும், துக்கத்தால் துடிக்கும், இரு குழந்தைகளுக்கும் குடும்பத்தாருக்கும் நமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

திருக்களாச்சேரி

செய: ஆ. குஞ்சிதபாதம், துணை: ஆர். நக்கீரன், பொருள்: நா: நாராயணசாமி, மாவட்டப்: இரா. கிருஷ்ணமூர்த்தி, மாரிமுத்து. செயற்குழு: 12 பேர்.

செம்பனார்கோவில்

செய: டி. பி. ஆறுமுகம், துணை: சி. புருஷோத்தமன், பொருள்: பி. தர்மலிங்கம், மாவட்டப்: எஸ். பி. துரைஅரசன் செயற்குழு: 14 பேர்.

கரியாபட்டணம்

செய: இரா. சங்கரன், துணை: ரா. காத்தமுத்து, பொருள்: கே. எஸ். முருகையன், மாவட்டப்: இரா. சங்கரன், கே. எஸ். முருகையன். செயற்குழு: 9 பேர்.

கொத்தமங்கலம்

செய: எஸ். எம். மணி, துணை: பி. டி. சாமி, பொருள்: வி. எம். ஆறுமுகம், மாவட்டப்: எஸ். எம். மணி. செயற்குழு: 8 பேர்.

தெற்குப்பொய்கைநல்லூர்

செய: இ. அகமது, துணை: கோ. தட்சிணாமூர்த்தி, பொருள்: வி. வீரப்பன், மாவட்டப்: ச. சொ. வடிவேல். செயற்குழு: 13 பேர்.

மங்கநல்லூர் பஜார்

செய: எ. எம். இப்ராகிம், துணை: பி. எஸ். எம். சுல்தான், பொருள்: எம். சொக்கலிங்கம், மாவட்டப்: ஆர். முத்துகுமாரசாமி. செயற்குழு 16 பேர்.

அதங்குடி

செய: கோ. பாலசுப்ரமணியம், துணை: என். இரத்தினவேல், பொரு: ஆர். செல்வமணி, மாவட்டப்: ஞானசுந்தரம், சபாபதி. செயற்குழு 11 பேர்.

★

முகவரி மாற்றம்

சத்தியவாணிமுத்து
179, போர்ச்சுகீஸ் சர்ச்தெரு,
சென்னை—1.

கழகத் தோழர்கள்

சுற்றுப்பயண நிகழ்ச்சிகள்.

6—9—52 சென்னை கீழ்ப்பாக்கம் தி.மு. கழகத்தின்திறப்புவிழாவில் தோழர்கள் மு. கருணாநிதி, என். வி. நடராசன், தோழியர் பூங்கோதை ஆகியோர் கழகக் கொள்கைகளை விளக்கிப் பேசினர்கள்.

7—9—52 மாபவரத்தில் காலையில் தோழர் ஆசைத்தம்பிக்குநடைபெற்ற திருமணத்தில் கிடங்கல் சம்பந்தம் M. L. A. தலைமையில் மு. கருணாநிதி சொற்பொழிவாற்றினர்.

மாலையில் தி. மு. கழகப் பொதுக் கூட்டத்தில் சௌந்தராசன் தலைமையில் தோழர் மு. கருணாநிதி, நடிகர் சிவசூரியன் சொற்பொழிவாற்றினர்கள்.

9—9—52 முகலிவாக்கம் கிராமத்தில் இளைஞர் மன்றப்பொதுக் கூட்டத்தில் டி. சண்முகம் M. L. A. தலைமையில்தோழர் மு. கருணாநிதி, தோழியர் சத்தியவாணிமுத்து ஆகியோர்சொற்பொழிவாற்றினர்.

10—9—52 காஞ்சிபுரத்தில் நடைபெற்ற தேர்தல் பொதுக்கூட்டத்தில் தோழர்கள் மு.கருணாநிதி, அரங்கண்ணல், பார்த்தசாரதி, (கம்) கல்யாணசுந்தரம் ஆகியோர் பேசினர்கள்.

★ பிரிவினை நாள் ★

வளவனூர்: 21—9—52 நா. நாமதேவன் தலைமையில்ல் இராசகோபாலன், வி. டி. நாதன், எம். அப்பாவு ஆகியோர் பேசினர்.

சன்னசிநல்லூர்: 23—9—52-ல் இ. அரங்கசாமி தலைமையில் வே. ஆறுமுகம், அ. செஞ்செயல், பெ. வணங்காமுடி ஆகியோர் பேசினர்.

ஆண்டிப்பட்டி: 18—9—52-ல் ஒரு மாபெரும் ஊர்வலம் நடைபெற்றது. பல இடங்களில் கழகக் கொடிகளை தோழர்கள் ஏற்றிவைத்தனர்.

திண்டுக்கல் 21—9—52 பாரங்தகன் தலைமையில் நடராசன், மகாதேவன், அமுதரசன், பாண்டியன், வணங்காமுடி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்.

வெங்கடாசலபுரம் 20—9—52 செல்லப்பா தலைமையில் எஸ். நெடுமாறன், கே. எ. குமரவேல் ஆகியோர் பேசினர்.

சென்னை: 14—9-52ல் (37-வது வட்டம்) கோ. இளவரசு தலைமையில் பெ. நா. சண்முகம், மு. அரங்கன், க.ரா. சம்பந்தம், ம.கி. இராமலிங்கம், மு. கலையழகன், ஆகியோர் நாட்டுப் பிரிவினைப்பற்றி விளக்கிப் பேசினர்.

பேங்களூர்: 16—9—52ல் (வடபகுதி) ரா. கனகராசன் தலைமையில் ஜே. சி. உசேன், மு. சி. வேணு, பொ. சு. மணி, ஆகியோர் பேசினர்.

விருதுநகர்: 22—9—52ல் இராசதுரை B. A. தலைமையில் மதுரை, எஸ். முத்து, எ. வி. பி. ஆசைத்தம்பி, ஆகியோர் பேசினர்.

ஆம்பூர்: 22—9—52ல் வாத்தியம் முழங்க ஊர்வலம் வந்து கழகக் கட்டிடத்தில் கொடியேற்றி கெ. ச. கோவிந்தன் பேசினர். எல்லோருக்கும் இனிப்பு வழங்கப்பட்டது.

அரக்கோணம்: 20—9—52-ல் எஸ். ஜே. இராமசாமி தலைமையில் இரா. நெடுஞ்செழியன், A. L. C. கிருஷ்ணசாமி ஆகியோர் பேசினர்.

காஞ்சீபுரம்:—25—9—52 வெ. சம்பந்தன் தலைமையில் காஞ்சி—கல்யாணசுந்தரம், இராம—அரங்கண்ணல், கே. டி. எஸ். மணி, திருநாவுக்கரசு ஆகியோர் பேசினர்.

வாலாஜாபாத்—23—9—52—ல் டபுள்யூ. கே. மணமோகனன் தலைமையில் சி. வி. எம். அண்ணாமலை, கே. டி. எஸ் மணி: டபுள்யூ. கே. இரத்தினவேலு, நம்மாள்வார், சிவஞானம், எ. ஜி எஸ். இளங்கோ ஆகியோர் நாட்டின் பிரிவினையைப் பற்றி விளக்கிப் பேசினர்.

சென்னை:-(33—வது வட்டம்) 21-9-52 சந்தாசலம் தலைமையில் அமிர்தநாதன் ம. கண்ணன் ஆகியோர் பேசினர்.

திருக்கோட்டியூர்:-22-9-52—ல் இராசசேகரன் தலைமையில் இரா. செங்குட்டுவன் நாடுபிரியவேண்டிய தன் அவசியத்தைக்குறித்துப் பேசினர்.

நாட்டரமங்கலம்: 21-9-52 வி. வேணுகோபால் தலைமையில் பொ. அண்ணாமலை பேசினர். போட்டிப் பந்தயங்கள் நடத்திப் பரிசுகள் வழங்கப்பட்டன.

சென்னை: (அயன்புரம்) 21-9-52 பி. வி. கேசவன் தலைமையில் நடைபெற்ற கமிட்டிக் கூட்டத்தில் நாடு பிரியவேண்டியதின் அவசியம் குறித்து பல தோழர்கள் சொற்பொழிவாற்றினர்.

பரமக்குடி: 25—9—52 இ. ரா. சௌ. பாண்டியன் தலைமையில் எம். ஆர். கணேசன் குழுவினரின் திராவிட கலா நிகழ்ச்சி நடைபெற்றது. நாட்டுப் பிரிவினையைக் குறித்துத் தலைவர் விளக்கிப் பேசினர்.

வலங்கைமான்:—27—9—52—ல் கரந்தை கணேசன் தலைமையில் சி. பி. சிற்றரசு பேசினர்.

தொட்டியம்:—24—9—52 எஸ். பி. தங்கவேலு பி. எ., பி. எல். எம். எல். எ. தலைமையில் சி. என். அண்ணாதுரை, மதிவாணன் அம்பில் தர்மலிங்கம் ஆகியோர் நாட்டுப் பிரிவினையின் அவசியத்தைக் குறித்துப் பேசினர்,

★

11—9—52 சென்னையில் நடைபெற்ற பொதுக்கூட்டங்களில் கலந்துகொண்டு மு. கருணாநிதி சொற்பொழிவாற்றினர்.

13—9—52 மாஞமதுரையில் தி. மு. கழகப் பொதுக் கூட்டத்தில் தோழர்கள் மு. கருணாநிதி, மதுரை கணேசன்,தென்னரசு ஆகியோர் பேசினர்கள். மு. கருணாநிதிக்கு வாழ்த்து இதழ் அளிக்கப்பட்டது.

14—9—52 தஞ்சையில் திராவிடப் பிரிவினைநாள் பொதுக்கூட்டம் மயூரநாதன் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள் மு. கருணாநிதி, என். எஸ். இளங்கோ இருவரும் சொற்பொழிவாற்றினர்கள்.

16—9—52 சென்னையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் தோழர் மு. கருணாநிதி, நடிப்புப்புலவர் கே. ஆர். ராமசாமி இருவரும் பேசினர்கள்.

21—9—52 சென்னை மவுண்ட் ரோடு தி. மு. க. கிளையின் ஆண்டுவிழாவில் தோழர்கள் மு. கருணாநிதி என். வி. நடராசன், கண்ணதாசன்,அருண்மொழி ஆகியோர் சொற்பொழிவாற்றினர்கள்.

★

திருவள்ளுவர் மன்றத் துவக்க விழா

26—9—52 ஆற்காடு அடுத்த விளாப்பாக்கம் கிராமத்தில் மே படி மன்றத் துவக்க விழா தோழர் தி. கு. ராமானுசம் தலைமையில் நடைபெற்றது. அதுபோது தோழர்கள் க. அன்பழகன் எம். ஏ. கவிஞர் கண்ணதாசன் ஆகியோர் திருவள்ளுவரைப் பற்றி மன்றத்தைத் துவக்கி வைத்தனர்.

சந்தாதாரர்களுக்கு

சந்தாதாரத் தோழர்கள் அனைவரும் கீழ்க்குறிப்பிட்டவைகளை கவனத்தில் கொள்ளக் கோருகிறோம்:

1. கடிதம், மணியார்டர் முதலியவைகளில் தவறாது சந்தா எண்ணைக் குறிக்கவும்.
2. முகவரியை மாற்றும்படி சொல்பவர்கள், சந்தா எண்ணையும், பழைய முகவரியையும் குறிக்கவும்.
3. ஒவ்வொருவரின் முகவரியின் கீழேயும் சந்தா முடியும் தேதி குறிப்பிடப் பட்டிருக்கிறது. அத்தேதிக்கு ஒரு வாரம் முன்னதாகவே, பணம் அனுப்பி சந்தாவை புதுப்பித்துக் கொள்ளுங்கள்.

மானேஜர்.

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெயரில்லாத ஓர் ஆற்றுக்கு 'ஸரஸ்வதி' என்று பெயரிட்டுத் தம் அன்பை வெளிப்படுத்தினர்.

பின்னர் கொஞ்சங் கொஞ்சமாக இவர்கள் இந்தியாவின் வடபாகமெங்கும் பரவி விந்திய மலையைத் தாண்டி தென்திசையிலும் பெருகினர். எந்தப் புது நதிக்கும் ஸரஸ்வதி என்ற பெயரையோ, அதன் பரியாய நாமங்களையோ வைத்தனர். வேகவதி என்ற பெயரில் எத்தனையோ சிற்றாறுகள் ஓடுகின்றன.

காலக்கிரமத்தில் ஸரஸ்வதி, நீரிலிருந்து நதியாகி, தேவதையாக மாறினள். அக்காலம் ஆரியர்கள் அத்யாத்ம சிந்தையில் இறங்கினர். மறையோரின் ஞானக்கண்களுக்கு அநுபூதிகள் உண்டாயின. ஸரஸ்வதி தீரத்தில இவர்களது அறிவு பெருகி வளரவே ஸரஸ்வதி அறிவுத் தெய்வமாகத் தோன்றினள்!''

இவ்விதம் எழுதப்பட்டுள்ள கட்டுரை, பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. (தோழர்கள் படித்துணரலாம்.)

இந்தக் கட்டுரையில்வரும் "ஆரிய மத" விளக்கத்தையும், எவ்விதம் 'கடவுள் உற்பத்தி' ஆனர் என்கிற கருத்தையும் தோழர்களது சிந்தனைக்கு வைக்கிறோம்.

இத்தகைய கருத்துக்கள் வரக்கூடிய இதழா, ஆனந்தவிகடன்! அதிலே வருகிறது, 'ஆரிய—திராவிடர்' நிலை குறித்த விளக்கத்துடன்!! "சரஸ்வதி" — மனிதர்களால் உருவாக்கப்பட்டவள், என்பதைத் தெளிவாக சித்திரங்களுடன் விளக்குகிறது.

இவ்விதம் வெளியிடும் 'ஆனந்தவிகடன்' இதழ் — கண்டனத்துக்குரியதாகாது—அவர்கள் மத்தியில். ஆனல் இதே கருத்தை, நாம் கூறினல் "நாஸ்திகர்!" "துவேஷி!!"

உதாரணமாக,

"அக்காலத் தமிழ் மக்கள் பகலவனை (சூரியனை)ப் போற்றி வந்தனர் என்பது உண்மையே. ஆனல், அப்போற்றுதல் இஞ்ஞான்று பேசப்படும் கடவுள் வழிபாட்டைக் குறித்ததாய் இருந்ததில்லை. மற்றுப, பகலவன் உலகுக்கு ஒளியை வழங்கும் பெருஞ்செயலை மேற்கொண்டிருப்பவனுதலால், அவனுக்கு நல்ல மதிப்புக் கொடுத்துப் போற்றி வந்தனர். அன்றியும், பகலவனைக் குறித்துப் பார்வையைச் செலுத்திக் கொண்டிருப்பதால், கண்களில் உள்ள நச்சுக் கிருமிகள் பகலவன் ஒளியில் நசித்துக் கண்களுக்கு ஒளியுண்மை மிகுதியாகின்றது. இங்ஙனஞ் செய்வதால் உடல் நலமும் ஆயுள் நீடிப்பும் பேணப்படுகின்றன. இந்த முறை இஞ்ஞான்றை மேனாட்டவரால் ஒரு சிறிது கையாளப்பட்டு வருகின்றது. சர்மனி நாட்டிலுள்ள சிலர், ஆடை எதுவும் இன்றி வெற்றுடம்போடு பகலவன் வெளிச்சத்திற் சிறிது நேரம் கிடக்கின்றனர் என்றும், இதனல் அவர்கள் உடல உரமும், நோயின்மையும், ஆயுள் நீடிப்பும் பெறமுடியுமென்றுஞ் சொல்வதாகவும் கேள்விப்படுகின்றோம்.

அதுவேயுமன்றி, நெல் முதலான உணவுப் பொருள்கள் விளைவதற்கும் பகலவனே துணையாயுங் காரணமாயும் நிற்கின்றன். கடலிலுள்ள நீரை முகந்துகொண்டு வான் வெளியை நோக்கிச் செல்லும் முகிற் கூட்டங்கள், பகலவனின் வெப்பத்தால் தாக்கப்பட்டவுடனே நீராய்க் கரைந்து மழையாய்ப் பொழிகின்றன. இதனல் நெல் முதலான பயிர்கள் செழித்து வளர்கின்றன. இனி, எவ்வளவு மழை பெய்தபோதினும், பகலவனுடைய ஒளி பயிர்கள்மீது படாதொழியின், அவைவளர்வதுமில்லைப், பயன் தருவதுமில்லை. இவ்வுண்மை, நிழற்பாங்கிலுள்ள செடி கொடி பயிர் முதலியன முறையேவளர்ந்து பயன் தாராமையானும், வெயிற் பாங்கிலுள்ள செடி கொடி பயிர் முதலியன முறையே வளர்ந்து உரிய காலத்திலே தக்க பயன் தருவதானும் பெறப்படும். எனவே, இத்தகைய நல்லியல்புகள் பகலவனிடத்தே அமைந்திருப்பதுபற்றித் தான் அக்காலத் தமிழ்மக்கள் அவனைப் போற்றிவந்தனர் என்றுணர்க.

இனி, அப்பகலவன் வழிபாடே பிற்காலத்தில் சிவ வழிபாடாக மாறிற்றென்றும் இஞ்ஞான்றை ஆராய்ச்சியாளர் சிலர் கூறுகின்றனர். இவர்கள் கூற்று, 'வெண்ணெயை வைத்துக்கொண்டு நெய்க்கு அழுவது'போலவே இருக்கிறது. சங்கப் புலவனுகிய சிவன் இறந்தொழிந்ததுபோலப் பகலவனும் இறந்தொழிந்து போயினனு? அல்லது கடவுளைப்போல எங்காவது மறைந்து கிடக்கின்றனனு? இல்லையே! அவன், அன்றும் இன்றும் என்றும் ஒரே தன்மையாய் நம்முன் நிற்கின்றனனே! இங்ஙனம் இருக்க, அவனை வழிபடுவதை விட்டு, அவனுடைய பெயரைச் சொல்லி வேறொரு வடிவத்தை வழிபடுவதாகச் சொல்வது எத்துணை அறியாமையின்பாற் பட்டதாய் இருக்கின்றது, பாருங்கள் அன்பர்களே! அன்றியும், பகலவனிடத்துக் காணப்பெறும் நல்லியல்புகள், இவர்கள் கூறுஞ் சிவ வடிவத்திற் காணப்படுகின்றனவா? அல்லது பகலவனைப்போல அச்சிவ வடிவம் ஒரு திறந்த வெளியிலாவது இருக்கின்றதா? இல்லையே! ஒரு அரசனுடைய மாளிகைக்கு எவ்வளவு பாதுகாப்பு அரண்கள் உண்டோ, அதைவிடப் பதின்மடங்கு மிகுதியான பாதுகாப்பு அரண்களை உண்டாக்கியன்றோ அச்சிவ வடிவத்தை வைத்திருக்கின்றனர்! அதுவுஞ், சிவன் இருக்கின்ற இடம் ஒரு சிங்கம் வாழும் குகையை விடப் பெரும் இருட்டுவாய்ந்ததாகவன்றோ இருக்கிறது! அங்கேயுள்ள சிவனைப் பார்க்கவேண்டுமானல், இக்காலத்திலுள்ள மின்சார விளக்கின் உதவிகொண்டும் பார்க்கமுடியாமல் இருக்கின்றதே! பக்கத்திலுள்ளவர்கள், 'இதோ பார், கண்!' 'அதோ பார், மூக்கு' 'உதோ பார்; செவி' என்று சுட்டிக் காண்பித்தாலும் பார்க்க முடிவதில்லையே! அன்றியும் அருட்பெரும் பிழம்பாய்த்—தனிப் பெரும் இரக்கமா (கருணையாய்)ய் விளங்குஞ் சிவனை மக்களாய்ப் பிறந்த அனைவரும் கிட்ட அணுகித் தொட்டு வழிபடமுடியாத தடையையும் வகுத்திருக்கின்றனரே! ஆரியருக்கு மட்டுமன்றோ அந்த இடம் பதிவு செய்யப்பட்டுள்ளது! எனவே, இத்தகைய பாதுகாப்புங் கட்டுப்பாடுகளும் உள்ள ஒரு இடத்தில் இருப்பதும், ஆரியரின் உரிமைச் சொத்துமான சிவனையும், பாதுகாப்புக் கட்டுப்பாடுகள் எதுவுமின்றித், திறந்த வெளியில் எல்லாரும் பார்க்கக்கூடியதாயும், மக்களின் வாழ்க்கைத் துறையின் பல பகுதிகளுக்குப் பெருந்துணை செய்வதாயும் உள்ள பகலவனையும் ஒப்பிட்டுப் பேசும் ஆராய்ச்சியாளரின் அறிவு இருந்தவாறு மிக நன்று! நன்று! என்று எள்ளி நகையாடற்பாலதாம்'' என்று ஒரு பகுத்தறிவாளன் கூறினல், அவன் நாஸ்திகனுகின்றன்.

பரம்பொருள்
ஆதிசக்தி
ஒருவனே தேவன்
மனிதனின் சிருஷ்டியே
கடவுள்.
இயற்கைதான் தெய்வமாயிற்று
ஆரியர் சிருஷ்டியே மற்றவை.

இத்தகைய, கருத்துக்கள், அவர்களிடமிருந்து வந்திருக்கின்றன. இதே கருத்துக்களை நாம் கூறினல் சொல்லடியும் கல்லடியும்! அவர்கள் சொன்னல், மேதை, சிறந்த அறிவாளி!!

பட்டங்களையும் பாராட்டுதல்களையும் அவர்கள் பெற்றுக்கொண்டு போகட்டும். நமக்கு ஆட்சேபனையில்லை. ஆனல், வெளிப்படையாக, நாம் "சொன்னதை, சொல்லும்" இவர்கள், நம்மையெதிர்ப்பதேன்? எதிர்ப்பதுமட்டுமல்ல, தாம் ஒப்புக்கொள்வதையும் தாமே மறுத்துக் கொண்டு தமது சுயவாழ்க்கையில் நடக்கத் தவறுவதேன்?

அன்பர் ஆச்சாரியார், 'ஒருவனே தேவன்' என்கிறர். ஆனல் அதன்படி நடக்கத் தாமதிப்பதேன்! வாதிடவரும்போது, வார்த்தை ஜாலங்களைக் காட்டிவிட்டு, வீட்டுக்குச் சென்றதும் 'சுக்லாம் பிரதரம்' ஜபிக்கும் சாதாரண ஆசாமியா, அவர்? அல்ல! அல்ல!! ஆனலும், அனுதினமும், போகுமிடமெல்லாம் தெய்வத்தைக் கும்பிடச் சொல்லுவதேன்? "சக்தியே தெய்வம்" என்று, மின்சாரத்தை ஒப்பிடும், அவர், சக்கராயுதபாணியின் மகிமையை விளக்கும் பஜகோவிந்தம், பாடுவதேன், எழுதுவதேன், பாராயணம் செய்வதேன்!

'சரஸ்வதி—மனிதனின் சிருஷ்டி, யென்று, படவிளக்கங்களோடு, வெளியிடும் 'ஆ. வி.' சரஸ்வதிபடம் வைத்து, மாலைசூட்டி, பூஜை நடத்துவானேன்? அந்தக் கட்டுரையைப் படிக்காத 'அந்தப்புர' மகளிர் இருக்கமாட்டார்கள்! ஆனல் 'அதுவும் ஏதோ ஒருகதை' என்று எண்ணிக்கொண்டு, அக்காரவடிசலும், அர்ச்சனைக்குப் பூத்தட்டும் எடுத்துக்கொண்டு கோயில்களுக்குத்தானே புறப்படுகிறர்கள்.

ஏனிந்த நிலை! என்னகாரணம் இதற்கு! — யோசிக்கத்தானே வேண்டும்.

நாள்தோறும், தெய்வத் தொழுல் குறித்து பிரமாதமாகப் பிரசங்கம் செய்து வருகிறர் ஆச்சாரியார்.

அவர் கூறுவது, ஒரே கடவுள்!

பழைய வழக்கங்களை அப்படியே கைவிடாமலிருப்பது, ஆனந்த விகடன்.

அது கூறுவது, கடவுள் மனிதனின் (ஆரியனின்) சிருஷ்டி!!

ஆனல், இவ்விதம் கூறும், நம்மை மட்டும் கேலிசெய்கிறர்கள்.

இவ்விதம் கூறுவது, 'பாஷன்' என்பதால், கூறுகிறர்களா? அல்லது அறிவின் மேதாவிலாசம் விளங்குவதற்கா?

இல்லையெனில், "எல்லாம் உணர்வோம். எனினும் பழைய வழக்கத்தைக் கைவிடமாட்டோம்" என்ற பிடிவாதமா?

அல்லது "இவை எமது முன்னோர் வகுத்த வழிகள். அது தப்போ, சரியோ, விடக்கூடாது. அது எமக்குத் தீங்குதரும்" என்பதா?

ஆச்சாரியார் விவேகி — அவரே இப்படிப் பேசுகிறர்! வேறுவிதமாகப் போதிக்கிறர்''

ஆனந்தவிகடன் ஒத்துக்கொள்கிறது, அறிவுலகின் தீர்ப்பை! ஆனல், பழைய பாதையை விடவில்லை!!

ஏன் இது? எண்ணிப்பார்க்க வேண்டுகிறோம் — நமது தோழர்களை அல்ல; நம்மை, 'நாஸ்திகர்' என்றும் 'எதிரிகள்' என்றும் எண்ணிக்கொண்டிருக்கும், நமது வர்க்கத்தவரை.

★ அவாவும்-பிறப்பும் ★

திருவள்ளுவர் அவாவே பிறப்புக்குக் காரணம் என்று கூறுவதாகச் சொல்லப்படுகிறது. 'அவா' என்பது 'விருப்பம்' அதாவது ஆசை என்ற பொருளில் வருவதாகும். எனவே, ஒருவனல் விரும்பப்பட்ட ஒன்று அவனல் முடியவேண்டுமானல், அவ்விருப்பமே அவன் பிறப்பதற்குரிய வித்தாகி நின்று அவனுடைய எண்ணத்தை முடிக்கின்றதென்பது திருவள்ளுவரின் கருத்தாகும். ஆனல், நல்லவை கெட்டவை என்ற இருவேறு செயல்களுக்கும் அவாவே காரணம் என்பது சொல்லாமலே பெறப்படும். திருவள்ளுவர், மக்கள் பிறவாமல் இருப்பதற்கு வழி சொல்ல வந்த இடத்தில், அவா அறுத்தலைப் பற்றிப் பேசியுள்ளார். என்றல், ஒன்றை விரும்புதற்கும் வெறுத்தற்குங் காரணமான பகுத்துணர்வற்ற செடி, கொடி, மரம், புல், பூண்டு முதலானவைகளுக்கும் பிறப்பும் இறப்பும் உளதாகச் சொல்லப்படுகின்றது. ஒரு மரத்தில் கோடிக்கணக்கான வித்துக்கள் உண்டாகிப், பின் அவை எல்லாம் தனித்தனி மரமாய்க் கோடிக்கணக்கான மரங்கள் உண்டாகின்றன. ஆகையால், அந்த மரத்திற்குக் கோடிக்கணக்கான விருப்பங்கள் இருந்தனவென்பதா அதன் பொருள்? மனிதனைப் போல், அந்த மரமும் இன்னொரு மரத்தைப் பார்த்து ஆசைப்படுகின்றதா? மரம் வேறு, மக்கள் வேறு என்றல், அது பொருந்தாது. எப்படியென்றல், ஒரு உயிரே, அது செய்த வினைகட்கேற்பப் பல்வேறு வகைப்பட்ட பிறப்புக்களை எடுக்கின்றதென்பதும் கடவுள் நூலார் கொள்கையாகும்.

"புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்......எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன்''

என்று சைவ சமயத் தலைவர் நால்வருள் ஒருவரான மாணிக்கவாசருங்கூறியுள்ளார். இதனல், ஒரு உயிரே பலவகைப்பட்ட பிறப்புக்களை எடுக்கின்றதென்ற கடவுள் நூலார் கொள்கை வலியுறுவதால், மரம் வேறு மக்கள் வேறு என்று கூறி மறு பிறப்புண்மையைமட்டும் நிலைநாட்ட முயல்கின்ற இன்னொரு சாராரின் கொள்கையும் பொய்யாம் என்றுணர்க. எனவே, திருவள்ளுவர் கூறும் 'அவா' பிறப்புக்குக் காரணம் என்பதும் மறுக்கப்படும் என்க.

ஏனென்றல், நல்ல செயல்கள் செய்வதற்கும் அவாவே காரணமாய் நிற்பதால், பிறப்பை ஒழிப்பதற்கு நல்ல செயல்களுஞ் செய்யப்படாதென்பதே திருவள்ளுவர் கருத்தாகக் கூறப்படுகின்றது. இன்னு செய்யாமை—இல்வாழ்க்கை—ஊக்கமுடைமை — குடிசெயல்வகை — பொருள்செயல்வகை—குற்றங் கடிதல்—செய்ந்நன்றியறிதல் — புகழ் — விருந்தோம்பல் — உழவு — இறைமாட்சி—அறன் வலியுறுத்தல்—மெய்யுணர்தல் முதலான மக்களின் வாழ்க்கைக்கு இன்றியமையாத நற்பண்புகளை வகுத்துதவிய திருவள்ளுவர், மக்களை ஒரு வேலையுமற்ற சோம்பேறிகளாக்கும் 'அவாவறுத்தல்' என்ற பொய்யுரையைப் பொய்யாமொழியாகிய திருக்குறளில் அமைத்திருப்பாரா? 'கடவுள் வாழ்த்து,' 'நீத்தார் பெருமை,' 'அவாவறுத்தல்' முதலான அதிகாரங்கள் எல்லாம், கடவுட் கொள்கையை நிலைநாட்டவந்த பிற்காலத்தவரால் எழுதிச் சேர்க்கப்பட்டனவாம் என்று கூறினல், அது எப்படி உண்மைக்குப் புறம்பானதாகமுடியும்?

★

இருவர் சந்திப்பு

—ஒரு பாடம்!

—[அண்ணல்]—

வெள்ளை மாளிகை! ரோஜாத் தோட்டம்!!—இந்திய நாட்டின் பிரபல சினிமா நட்சத்திரங்கள் அங்கே நிற்கின்றனர். அவர்களுக்கு மத்தியில் அகில உலகத்தையும் ஆட்டிப் படைக்கும் ஆசைகொண்ட தலைவர், உரையாடிக்கொண்டிருக்கிறார்.

'அழகான காட்சி இது'!—என்று எண்ணினார், அவர்கள் உரையாடலைக் கவனித்துக்கொண்டிருந்த ஒரு போடோகிராபர். ஆவலோடு ஓடி வந்தார், காமிராவுடன்.

அழகு ராணிகளும், அருமையான நடிகர் எனப் போற்றப்பட்டோரும், தமது தலைவரைச் சந்திக்கும் காட்சியை, ரோஜாத் தோட்டத்தைச் சுற்றி நின்று பார்த்துக் கொண்டிருக்கிறது, ஒரு சிறு கூட்டம்.

போடோகிராபர், நட்சத்திரங்களைப் படம்பிடிக்க நெருங்குகிறார், திடீரென ஒரு சிறு சப்தம்! தூக்கி வாரிப்போடுகிறது!! காமிராவில் வைத்திருந்த 'பிளேஷ் பல்ப்' வெடித்து வீழ்ந்ததால், ஏற்பட்ட சப்தம் அது. நட்சத்திரங்களைப் பார்த்து, தலைவர் சொன்னார். சிரித்துக்கொண்டே சொன்னார். "நிச்சயம் இந்தக் கூட்டத்தில் ஒரு கம்யூனிஸ்டு இருக்கவேண்டும்!". அயல நாட்டுத் தலைவரின், இச் சொல் கேட்ட, இந்திய திரையுலக 'ஜோதி'களும் வயிறு குலுங்கச் சிரித்தனர்! தலைவரின் 'ஹாஸ்யத்தை' ரசித்து ரசித்துச் சிரித்தனர்!!

*

உலகில் பாதியை, தமது பண பலத்தால், மயக்கிக்கொண்டிருக்கும் அமெரிக்காவின் அரசாங்க அலுவலகமான வெள்ளை மாளிகையின் தோட்டத்திலே, கடந்த சில தினங்களுக்குமுன் நடைபெற்ற சம்பவம், இது. இந் நிகழ்ச்சியை, விளக்கமாக அமெரிக்கச் செய்தி ஸ்தாபனம் அகில உலகுக்கும் அறிவித்திருக்கிறது. திரைப்பட நடிகர்களை, அமெரிக்கா அழைத்து, 'கௌரவிப்பதில்' உள்ள சூட்சுமத்தின், படப் பிடிப்பு இது. 'இந்திய சினிமா நட்சத்திரங்களில் சிலரை அமெரிக்கா அழைக்கிறது'—என்று செய்தி எட்டியதும், "அமெரிக்காவுக்கு இந்தியக் கலையின்மீதிருக்கும் அபார ஆசையைப் பாரீர்! அதனாலன்றோ ராஜசுலோசனாவையும் நர்கீசையும் சாந்துலால்ஷாவையும், சுப்பிரமணியத்தையும், சூர்யகுமாரியையும் அழைக்கிறது!! என்று நாவாரப் பேசியவர்கள் உண்டு, இங்கு. அந்த மகிழ்ச்சியோடுதான், அங்கு போயிருப்பார்கள், இந்திய நட்சத்திரங்கள்! ஆனால், அமெரிக்கா, இந்த 'அன்பழைப்பை'யும், தனது விளம்பர முறைகளில் ஒன்றாக்கிக்கொண்டிருக்கிறது! சிறு 'பல்பு' வெடித்ததற்கு, 'கம்யூனிஸ்டுகளை' இழுத்திருக்கிறார், ஜனாதிபதி ட்ரூமன். எப்போதும், அமெரிக்க முதலாளிகளின் சிந்தனையில், கம்யூனிசம் சம்பந்தமான பயம் இருப்பதை அவரது கூற்று, விளக்குகிறது ஆனால் அவரது கூற்று கேட்ட இந்திய திரை நட்சத்திரங்கள் ஏன் சிரித்தனவோ, தெரியவில்லை! ட்ரூமன் சிரித்ததால், தாமும் சிரிக்கவேண்டுமென, 'மரியாதைக்காக' சிரித்திருக்கலாமோ?—எதுவாகினும் சரி, அமெரிக்க பணமோகினி, இங்கிருந்து தூதுக் குழுக்களை வரவேற்பதிலும், 'வியாபார முறை' இருப்பதை எவரும் இந்த நிகழ்ச்சியிலிருந்து அறிந்துகொள்ளலாம். கலைஞர்களைப் போற்ற அல்ல, அமெரிக்கா அழைத்தது!! தமது பிரச்சாரத்துக்கு அவர்களது புகழைப் பயன்படுத்திக்கொள்ளவே!!

இல்லையெனில், 'அமெக்காக் கலைஞன், சார்லி சாப்ளின் பிரெஞ்சுப் பூமியிலிருந்தவண்ணம், இவ்விதமா கண்ணீர்'வடிப்பார்?

*

"நான் ஓர் கலைஞன்; அரசியல் வாதியல்ல. நாற்பது ஆண்டுகளாக, நான் உலவிய அமெரிக்கப் பூமிக்குள், மீண்டும் செல்ல, வாழ, அமெரிக்க சர்க்கார் தடைசெய்யத் திட்டமிடுகிறதாம்! நான் கம்யூனிஸ்டாம்! கூறுகிறார்கள். குற்றம்சாட்டுகிறது, ட்ரூமன் சர்க்கார். சிலமாதங்களுக்கு முன்தான், அமெரிக்காவிலிருந்து புறப்பட்டேன் — ஐரோப்பாவைச் சுற்றிப்பார்த்து வரலாம் என்று. அனுமதி தருமாறு அமெரிக்க சர்க்காரையும் கேட்டேன். "சென்று வருக! விரைவில் திரும்பி வருக!!" — என்று, என்னை வாழ்த்தி, அனுமதி தந்தார்கள். ஆனால், திரும்பச் செல்ல இருக்கும் என்னை, இப்போது தடுக்கப்போகிறார்கள். "அமெரிக்காவில் மீண்டும் நுழைய விடலாமா?" — என்று என்னைப் பற்றி விசாரணை செய்வார்களாம். நான் ஓர் அமெரிக்கப் பிரஜை! ஆனால் என்னை, அன்போடு வெளியே சென்று வா' 'என்று சொல்லிவிட்டு, ஐரோப்பாவில் உலவிக்கொண்டிருக்கும் எனக்கு, இத் தாக்குதலை, வீசுகிறார்கள். நான் அரசியல் வாதியல்ல; கலைஞன்! தேசத்தியாகி அல்ல—தொண்டன். நான் ஒரு தனி நபர். "சுதந்திரமாக வாழவேண்டும்" இதுவே எனது அரசியல். ஆனால், என்மீது, அபபுபோடுகிறார்கள். நான் அமெரிக்காவுக்குத் திரும்புவது தீதாம்! செப்புகிறார்கள்!!"

இவ்விதம், ஐரோப்பாவில் சுற்றுப் பயணம் செய்துகொண்டிருக்கும், சார்லீசாப்ளின், நூறு பத்திரிகை நிருபர்களை அழைத்து, தமது கண்ணீரைக் கொட்டியிருக்கிறார். நடிப்புலகில் முடிசூடா மன்னராக விளங்கும் நடிகநட்சத்திரம் அவர்! சார்லீயின் படங்கள் அத்தனையும், சிந்தனைக்கு விருந்தூட்டுபவை. சுதந்திரதாகமும், மனிதாபிமானமுமே அவரது இலட்சியங்கள் என்பதை, அவரது படங்களைக் கண்டோர் அறிவர். ஹிட்லரின் பாசிச வெறியைக் கண்டித்து அவர் சித்தரித்த "சர்வாதிகாரி" (DICTATOR) உலகில், அவருக்குத் தனிமதிப்பைத் தேடித் தந்தது. "நவீன காலம்" (Modern Times) சிந்தனைக்கு'விருந்து! இத்தகைய அருமையான படங்களைத் தந்து, அமெரிக்காவின் புகழை உச்சிக்கேற்றிய நகைச்சுவை மன்னனை, அமெரிக்க சர்க்கார் கண்ணீர் சிந்துமாறு, தொல்லைக்குட்படுத்துகிறது. ஐரோப்பிய சுற்றுப்பயணம் முடிந்து திரும்பினால் அவரை அமெரிக்காவில் வாழவிடலாமா என்பது குறித்து "முடிவு" செய்ய அமெரிக்க சர்க்கார் "விசாரணை" நடத்துமாம். வேதனை, ஒரு உலகக் கலைஞனுக்கு! வேடிக்கை நடத்துகிறார், ட்ரூமன் இந்தியத் திரை நடிகர்களை அழைத்து!! சார்லீ—ஒரு பொதுவுடைமைவாதியாம். அதனால்தான் இந்த விசாரணையாம்.

*

"கம்யூனிசம்"—இந்த வார்த்தையைக் கேட்டு, கதிகலங்குகிறது, அமெரிக்கா. இந்த ஒரு சொல், ஏன் அவர்களை, கலக்கத்துக்கும் கலவரத்துக்கும் உள்ளாக்கவேண்டும்? அமெரிக்காவை மட்டுமல்ல, தனியுடைமை ஆதிக்கம் தலைவிரித்தாடும் எங்கும், "கம்யூனிசம்" என்றால், பயமும் பதட்டமும் அதிகரித்திருக்கிறது. அதனாலேயே கேலி செய்கிறார்கள்! கண்டிக்கிறார்கள்! தண்டிக்கிறார்கள்! 'கிள்ளியெறிவோம்' என்று கர்ஜிக்கிறார்கள்!

"கம்யூனிசம்"—ரஷ்யாவுக்குமட்டும் உரிமையுள்ள ஒரு சொத்து அல்ல. கம்யூனிஸ்டுகள்மட்டுமே, பேசவேண்டிய, கட்டுப்பாடுக்குள் ளடங்கியதல்ல. அது ஒரு நல்ல கொள்கை! மனிதர்களை வாழ்விக்கும் சித்தாந்தம். பேதங்களைப் போக்கி சமதர்மம் தழைக்கச் செய்யும் கொள்கை.

ஆனால், ஏழைகளை உறுஞ்சிவாழுவோரும், பணம் பெருத்தோரும், அதைக்கண்டு அஞ்சுகிறார்கள் — தமது சுகபோகம் இல்லாது போய் விடுமோவெனும் பயத்தால்

இந்தப் பயம், எங்கெங்கு சுகபோகிகள் இருக்கிறார்களோ, அங்கெல்லாம் இருக்கிறது.

இன்றைய உலகில், பெரும்பாலும், ஆலையரசர்கள்தான், சுகபோகிகளில் முதல் வரிசையிலிருப்பவர்கள்.

இந்த ஆலையரசர்களை அதிகமாகக் கொண்ட பூமிகளிலெல்லாம் மேற்படி கலக்கம், அதிகமாக இருக்கிறது.

அமெரிக்கா ஆலையரசர்கள் தவழ்ந்து விளையாடும் பூமி! சொல்லொணாசக்தி படைத்தோர் இருக்கும் இடம்!!

ஆகவே, அங்கு "கம்யூனிசம்" கலக்கத்தையும் துக்கத்தையும் தருகிறது.

சிறுபல்புவெடித்ததற்குப்'பழி'யை கம்யூனிஸ்டுமீது சுமத்துகிறார்! அவ்வளவு 'இரகசிய சதியாளர்'களாம் கம்யூனிஸ்டுகள்!! — மக்கள் அவ்விதம் நினைத்து, கம்யூனிஸ்டுகள் மீது வெறுப்புகொள்ள வேண்டுமாம்.

இந்த நோக்கம்—ட்ரூமனுக்கிருப்பது ஆச்சரியமல்ல. ஆனால் நேருவுக்கும் இருக்கிறதே! அவரைசூழ்ந்திருக்கும் திருவாளர்களுக்கும்இருக்கிறதே!!

*

கடந்த 25ந்-தேதி, அமெரிக்காவில் இந்தியத் தூதுவராக நியமனம் செய்யப்பட்டிருக்கும் ஜி. எல். மேத்தா, பதவி ஏற்றுள்ளார். அப்போது ட்ரூமனைச் சந்தித்து, உரையாடியிருக்கிறார்.

இந்தியாவின் அரசியல் நிலையை விளக்கும்போது, அவர் துவக்கிய முதல்வாக்கியம், "ட்ரூமன் அவர்களே! உங்களைப்போல, நாங்களும் ஒரு ஜனநாயக சர்க்காரை வைத்திருக்கிறோம்" என்பதாகும்.

ஜனநாயக சர்க்காரை வைத்திருக்கிறோம் என்று தோழர் மேத்தா சொல்லிக்கொள்வதில் எவருக்கும் ஆட்சேபனை இல்லை. ஆனால், "உங்களைப்போல்" என்று குறிப்பிட்ட என்ன அவசியம் வந்தது?

பக்காத்திருடன் — என்று ஊர் முழுதும் பிரபலமாகியிருக்கும் ஒருவனிடம் போகிறான், தன் பெயர் நல்லதம்பி, என்று அடிக்கடி சொல்லிக்கொண்டிருக்கும் ஒருவன்.

பக்காத்திருடனைப் பார்த்து, 'ஐயா! திருடரே!! உங்களைப் போலவே நாங்களும் நடந்து வருகிறோம்—ஏற்பாடுகள் யாவும் உங்கள் மாடலில் தான்' என்று கூறினால், என்ன நினைக்க முடியும்? 'இவனும் அவனும் ஒரேரகம்தான்; இதுவரை வெளியில் வேஷம் போட்டு வருகிறான். இவனும் ஓர் கள்ளன்தான்' என்று தானே நினைப்பர்—ஊரார்.

பணதிபத்திய பிம்பத்திடம் சென்று, 'உங்களைப்போல, நாங்களும் ஒரு சர்க்காரை ஏற்படுத்தியுள்ளோம்' (Like you, We have a democratic form of Government...) என்று தோழர் மேதா கூறியுள்ளார். மேதா, இந்திய சர்க்காரின் அரசியல் தூதுவர்.

அவரது கூற்றைக் கேட்டதும் ட்ரூமன் அளித்த பதில் இருக்கிறதே, அது மிகமிகத் தெளிவாக்கும்— வடநாட்டு ஆலையரசர்களுக்கும் அமெரிக்க ஆதிபத்யத்துக்குமிடையில் இருக்கும் இரகசிய ஒப்பந்தத்தை.

"உங்களைப் போல, நாங்களும் ஒரு சர்க்காரை ஏற்படுத்தியுள்ளோம். மகாப் பெரிய தேர்தலில் எமக்கே பெருத்த வெற்றி"— என்று, மேதா, கூறியதும், ட்ரூமன் பதில் அளித்திருக்கிறார்.

"ரொம்ப சந்தோஷம்! உங்கள் தேர்தல் வெற்றி எமக்கு தைரியத்தைத் தந்திருககிறது."

"தைரியம் தந்திருக்கிறதாம்!"— எது? இந்தியத் தேர்தலில், காங்கிரஸ் வெற்றி பெற்றது! தைரியத்தை யாருக்கு தந்திருக்கிற தென்று ட்ரூமன் கூறுகிறார் தெரியுமா? "கம்யூனிஸ்டு அல்லாத உல குக்கு" (Non-Communist world)

இந்தியத் தேர்தலில் காங்கிரஸ் அமோக வெற்றிபெற்றது, கம்யூனிசமல்லாத நாடுகளுக்குப் புது தைரியத்தை (renewed courage) த் தந்துள்ளதாம் — கூறுகிறார், ட்ரூமன்!

"வீழ்த்தினோம்! வெற்றிக்கொடி நாட்டினோம்!!"—என்று, பக்கத்து நாட்டுப் படைவீரன் போய்ச் சொல்ல, "சபாஷ்! உமது வெற்றி கண்டு பெருமிதம் கொண்டோம். சோர்ந்திருந்த எம்மை புது ஊக்கங்கொள்ளச் செய்திருக்கிறது' என்று அண்டை நாட்டுத் தலைவன் தோள் தட்டினால், என்ன பொருள்!

இருவரும் தோழர்கள் — ஒரு எதிரியை வீழ்த்த ஒற்றுமைகொண்டிருக்கிறார்கள் என்பதுதானே!

இந்த உண்மையை இருவர் சந்திப்பும் விளக்கமாகத் தெரிவிக்கிறது

(2-ம் பக்கம் பார்க்க)

மலர்

சந்தாதாரர்கள் பலர், தங்களுக்கு தி. மு. க. 3-வது ஆண்டு மலர் கிடைக்கவில்லை என்பதாக எழுதுகின்றனர். இந்த மலர் சந்தாவில் சேர்க்கப்படமாட்டாதென்றும் பொங்கல் மலர் மட்டுமே சந்தாவில் சேர்க்கப்பட்டிருக்கிறதென்றும் தனியாக எட்டணா அனுப்பினால் ஆண்டு மலர் அனுப்பப்படும் என்றும் முன்னரே பத்திரிகையில் வெளியிட்டிருக்கிறோம்.

மலருக்காகப் பணம் அனுப்பியவர்களுக்கு 27–9–52ல் இங்கிருந்து மலர் அனுப்பப்பட்டுவிட்டதென்பதையும், 21–9–52ல் "திராவிட நாடு" இதழ் வெளியிடவில்லை என்பதையும் சந்தாதாரர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறோம்.

போறுப்பாளர்

Edited Printed & Published by C. N. Annadurai M. A., at "Dravida Nadu" Press, 95, Tirukkachinambi St., Kancheepuram.